# திருத்தங்கல் நாடார் கல்லூரி

(சென்னைவாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின்முறை தர்ம பண்டிற்கு பாத்தியப்பட்டது)
சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது | 2(f) UGC சட்டத்தின் கீழ் NAAC ஆல் 'பி++' தரத்தில் மறு அங்கீகாரம் பெற்ற நிலை | ஒரு ISO 9001: 2015 சான்றளிக்கப்பட்ட நிறுவனம்
சேலவாயல், சென்னை - 600051

## சென்னைப் பல்கலைக்கழகம்
## தமிழ் மேம்பாட்டுச் சங்கப் பலகை
## சென்னை
## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம்
## அமெரிக்கா
## மற்றும்
## சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
## (A Peer-reviewed Scholarly Indexed Quarterly Journal)

## இணைந்து நடத்தும்
## பன்னாட்டுக் கருத்தரங்கம்

## பொருண்மை
# தமிழியல் ஆய்வுகள் : நிகழ்ந்தனவும் நிகழ வேண்டுவனவும்




**நாள்: 29 சனவரி 2026**
**திருவள்ளுவராண்டு 2057**
**தை -15, வியாழக்கிழமை**

**நிகழிடம் :**
**திருத்தங்கல் ஞானியார் ஆறுமுகநாடார் மீனம்மாள் அறக்கட்டளை குளிரரங்கம்**

**அன்புடையீர்!**

சென்னை வாழ் திருத்தங்கல் இந்து நாடார் உறவின் முறை தர்ம பண்டிற்குப் பாத்தியப்பட்ட இருபாலர் பயிலும் திருத்தங்கல் நாடார் கல்லூரி 1997 முதல் தன் கல்வி பயணத்தை வெற்றியுடன் தொடர்ந்து வருகிறது. நம் தென்னாட்டு காந்தி படிக்காத மேதை, கல்விக்கண் திறந்த காமராசரின் நெறி நின்று மாணவர் தொண்டே மகத்தான தொண்டென கல்விச் சேவை ஆற்றி வருகிறது.

வடசென்னையில் செயலாற்றி வரும் எங்கள் கல்லூரி, தரமான கல்வியை அளித்து திறமையான மாணவர்களை உருவாக்கி மனித மாண்பினை மாணவச் சமுதாயத்திற்குக் கற்பிக்கும் தொலை நோக்குப் பார்வையுடன் செவ்வனே செயலாற்றி வருகிறது. 'அறிவே ஆற்றல்' என்ற தாரக மந்திரத்துடன் கல்வித் தரத்தில் வெற்றி நடை போட்டு இயங்கி வரும் எங்கள் கல்லூரியின் தமிழ்த்துறை 2019 இல் தொடங்கி தேசிய/பன்னாட்டுக் கருத்தரங்கம், பயிலரங்கம், அரசு பணிவாய்ப்புக் கருத்தரங்கம் ஆகிய செயல்பாடுகளை நிகழ்த்தி வருகின்றது.

### பன்னாட்டுக் கருத்தரங்கம்

தமிழ் மொழி ஆய்வுகள், சங்ககாலம் முதல் பல நூற்றாண்டுகளாய்ச் செழித்து வந்துள்ளன. இலக்கியம், இலக்கணம், உரைநூல்கள், சுவடி பதிப்பு, வரலாறு, பண்பாடு ஆகிய துறைகளில் பெரும் பங்களிப்புகள் நிகழ்ந்துள்ளன. உ.வே.சாமிநாதையரின் சுவடி மீட்பு, பாரம்பரிய இலக்கண விளக்கவியல், சங்க இலக்கிய ஆய்வுகள் போன்றவை தமிழியல் வளர்ச்சியின் முப்பெரும் தூண்களாக உள்ளன.

ஆனால் உலகம் மாறுகிறது; மொழியின் தேவையும் மாறுகிறது. எனவே தமிழ் ஆய்வுகளும் புதிய திசைகளை நோக்கிச் செல்ல வேண்டும். இனி நிகழ வேண்டியது தரவு அடிப்படையிலான தமிழியல் ஆய்வுகள் மட்டுமே கணினி, மொழியியல், செயற்கை நுண்ணறிவு முதலியவை தமிழ் ஆய்வின் அடுத்த படிநிலைகளாக அமைதல் வேண்டும்.

தமிழ் மொழியில் புதிய சிந்தனை உருவாக்கம் அவசியம். தமிழ்ப் பேச்சும் எழுத்துத் தரவு பாதுகாப்பும் காலத்தால் தேவைப்படும் தமிழ்ப் பணியாகும். தமிழின் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் போலத் தமிழ் ஆய்வுகள் நம் நரம்பியல் ஆய்வுகளாக, புதிய அறிவியல் ஆய்வு நெறிமுறைகளோடு வலம் வர வேண்டும். அப்போதுதான் தமிழாய்வுகள் மனித இயங்கியலோடு பொருத்தமுறும்.

பாரம்பரியம் நம் வேராக இருந்தாலும் புதுமை நம் எதிர்காலம். தமிழை அறிவியலின் மொழியாகவும் உலகத் தொடர்புடைய தொழில்நுட்ப மொழியாகவும் உயர்த்துவது இன்றைய ஆய்வின் முக்கிய கடமை. தமிழ் ஆய்வுகள் பல நடந்துள்ளன. ஆனால் இன்னும் நிகழ வேண்டியன பெரிதினும் பெரிது. அந்தப் பயணத்தை இன்று நாமே தொடங்க வேண்டிய நேரம் இதுவாகும்.

### கட்டுரையாளர்களின் கவனத்திற்கு

- ஆய்வுக் கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவானவையாக இருக்க வேண்டும். வேறு எந்த ஆய்வு நூல்களிலோ அல்லது கருத்தரங்கிலோ இடம் பெற்றிருக்கக்கூடாது.
- கட்டுரைகள் 5-7 பக்கங்களுக்குள் இருத்தல் வேண்டும்.
- ஆய்வு நோக்கம், ஆய்வு அணுகுமுறை, திறவுச்சொற்கள், உட்தலைப்பு, மேற்கோள்கள், பயன்பட்ட நூல்கள் ஆகியவற்றை உரிய நெறிமுறையோடு பயன்படுத்த வேண்டும்.
- அடிக்குறிப்புகள் உரிய நூல் சான்றோடு கொடுக்கப்பட வேண்டும்.
- இணையவழிக் கோப்புகளில் இருந்து எடுக்கப்படும் குறிப்புகளுக்கும் பயன்பட்ட இணையதள முகவரியைக் கொடுக்க வேண்டும்.
- கட்டுரைகள், எழுத்துரு 12 மற்றும் ஒருங்குறி (Unicode) எழுத்துருவிலும் 1.5 அளவு இடைவெளியிலும் அமைதல் வேண்டும். ஆங்கிலக் கட்டுரைகள் TIMES NEW ROMAN எழுத்துருவில் இருக்க வேண்டும். தட்டச்சு செய்து சொற்கோப்பாக (Word Document) அனுப்புதல் வேண்டும்.
- கட்டுரைகளைத் திருத்துவதற்கும் நீக்குவதற்கும் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு முழு உரிமை உண்டு.
- கட்டுரைகள் ISSN எண்ணுடன் கருத்தரங்க நாளன்று சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழில் (A Peer-reviewed Scholarly Indexed Quarterly Journal) வெளியிடப்படும்.
- கட்டுரை எழுதுபவர்கள் ஆய்விதழ் வடிவமைப்பில் எழுத வேண்டும் அதற்கான வடிவத்தினை இணைத்து அனுப்புகிறோம்.
- கட்டுரையாளர்களுக்குச் சான்றிதழ், கட்டுரைத் தொகுப்படங்கிய ஆய்விதழ் ஆகியவை வழங்கப்படும்.

## ஆய்வுக்களங்கள்

இலக்கண நூல்கள், சங்க இலக்கியங்கள், மொழியியல், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள், நவீன இலக்கியங்கள், ஒப்பியல் இலக்கியங்கள், மொழிபெயர்ப்பு இலக்கியங்கள், செயற்கை நுண்ணறிவு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக்கட்டுரைகள் அமையலாம்.

## கட்டண விவரம்

பேராசிரியர்கள் & ஆய்வாளர்கள் : 1200/-
அயல்நாட்டினர்: 1500/- (இந்திய மதிப்பில்)
ஆய்வுக் கட்டுரை வந்து சேர வேண்டிய நிறைவு நாள்: **07-01-2026**

கட்டுரைகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி: **tnctamilinconf2026@gmail.com**

கருத்தரங்கப் புலனக்குழுவில் (WhatsApp) இணைய:
https://chat.whatsapp.com/ITMlkzwmAhEKZr4grSj4SP?mode=hqrc

## வங்கி விவரம் (BANK ACCOUNT DETAILS)

Account Name: Research Fund,
Thiruthangal Nadar College

**A/C No: 008150310875350**
IFSC Code: TMBL0000008
Bank: Tamilnad Mercantile Bank Ltd.
Branch : Old Washermanpet, Chennai - 21.

## கருத்தரங்க ஒருங்கிணைப்புக் குழு

### கருத்தரங்கப் புரவலர்
திரு அ. நாராயணமூர்த்தி
செயலாளர் மற்றும் தாளாளர்
திருத்தங்கல் நாடார் கல்லூரி

### கருத்தரங்க நெறியாளர்
முனைவர் வெ. தேவி
முதல்வர்
திருத்தங்கல் நாடார் கல்லூரி

### கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்
முனைவர் ஜோ. சம்பத்குமார்
தமிழ்த்துறைத் தலைவர்

### கருத்தரங்க இணை ஒருங்கிணைப்பாளர்
திரு. சு. நரேந்திரகுமார்
உதவிப் பேராசிரியர்

### கருத்தரங்கப் பொருளாளர்
திரு. த.சிவகுமார்
உதவிப் பேராசிரியர்

### பதிப்புக் குழு
முதுமுனைவர் நா. சிவா
உதவிப் பேராசிரியர்
முனைவர் ந. சோமசுந்தரம்
உதவிப் பேராசிரியர்

### செய்தித் தொடர்புத்துறை
முனைவர் பி. ஜானகி
உதவிப் பேராசிரியர்
முனைவர் பி. ஜீவா
உதவிப் பேராசிரியர்
முனைவர் மு.சுகவாசன்
உதவிப் பேராசிரியர்

### கருத்தரங்க உறுப்பினர்கள்
திருமதி ஜெ. தேவி
உதவிப் பேராசிரியர்
முனைவர் ம. மகாலெட்சுமி
உதவிப் பேராசிரியர்
முனைவர் அ. மலர்விழி
உதவிப் பேராசிரியர்
முனைவர் து.ஜெய்ஶ்ரீ
உதவிப் பேராசிரியர்

### தொடர்புக்கு
முனைவர் மா. மார்த்தாண்ட பூபதி
இணைப் பேராசிரியர்
95008 67312, 9976025731
முனைவர் க.கௌரி
உதவிப் பேராசிரியர்
9444039912
திருமதி நீ. பொற்செல்வி
உதவிப் பேராசிரியர்
95515 93534

### ஆலோசனைக்குழு

முனைவர் கி. சங்கர நாராயணன்
துறைத் தலைவர் - தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம் - சென்னை.

தமிழ்மாமணி
முனைவர் தாழை இரா.உதயநேசன்
நிறுவனத் தலைவர் - வேந்தர்
அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம், அமெரிக்கா.

முனைவர் இரா. குறிஞ்சிவேந்தன்
புலமுதன்மையர் - வளர்தமிழ்ப்புலம்
பேராசிரியர் மற்றும் தலைவர்
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தஞ்சைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.


திருமதி எம்.பகீரதி
முதுநிலை விரிவுரையாளர்
சமூகவியல் மற்றும் மானுடவியல்
துறைத்தலைவர் - சமூக விஞ்ஞானங்கள் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

முனைவர் அ. மாலதி
உதவிப் பேராசிரியர் & தலைவர்
தமிழ்த்துறை
புதுவைப் பல்கலைக்கழகச் சமுதாயக் கல்லூரி, புதுச்சேரி.

## குறிப்பு:

- **ISSN - Peer-reviewed Journal - வெளியீடு என்பதால் பேராசிரியர்களுக்குப் பணி நியமனம், பதவி உயர்வு, தகுதி ஒப்புதல் (qualification approval), முனைவர்பட்ட ஆய்வாளர் ஆய்வேடு சமர்ப்பிக்க தகுதியான ஆய்வுக் கட்டுரை ஆகியவற்றிற்குத் தகுதி உடையதாகக் கருதப்படும்.**

## ஆய்வுக் கட்டுரை அமைய வேண்டிய முறைகள்



Shanlax
International Journal of Tamil Research

OPEN ACCESS

Manuscript ID: TAM-10012025-9321

Volume: 10

Issue: 1

Month: July

Year: 2025

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 29.05.2025

Accepted: 21.06.2025

Published: 01.07.2025

Citation: Murugesapandian, N. 2025. "Kalaingar's Plays Depict Dravidian Ideology." *Shanlax International Journal of Tamil Research, 10*(1), 1–15.

DOI: https://doi.org/10.34293/tamil.v10i1.9321

*Corresponding Author: murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

### Kalaingar's Plays Depict Dravidian Ideology

[redacted]

http://orcid.org/0000-0002-1831-7730

**Abstract**

*Kalaingar's plays, in their role as replicas, confront contradictions between the period in which they were published and the current social environment. The contemporary nature of the dramatic works written by the Kalaingar must be assessed due to a specific political need or social crisis. The important question is how the Kalaingar's plays, in the form of imitations, are absorbed by the modern reader. Kalaingar's plays, written against the ideological backdrop of the Dravidian movement, which questioned the Vedic Sanatana and Varunashrama doctrines that had been dominant for centuries, are still in demand today.*

***Keywords:*** *Dravidian Movement, Dravidia Munnetra Kazhagam, Kalaingar M. Karunanidhi, Politics, Drama, Social Reform, Anti-Sanathan, Tamil Nadu, Anti-Superstition, Tamil Identity, Performing Arts.*

**References**

1. Karunanidhi, M. Nenjukku Neethi, Part I.Chennai: Thirumagal Nilayam,1989.
2. Karunanidhi, M. Nenjukku Neethi, Part II.Chennai: Thirumagal Nilayam,1987.
3. Karunanidhi, M. Manimakudam.Chennai: Bharathi Publishing House, 1986.
4. Karunanidhi, M. Nachukkoppai.Vellore: Dravidan Publishing House,1951.
5. Karunanidhi, M. Udayasuriyan. Murasoli, Weekly Magazine-24-08-1956 to 04-01-1957.
6. Karunanidhi, M. Kakithapoo. Murasoli Pongal Malar-1967.
7. Karunani, M. Tukumedai. Vellore: Thendral Publishing House, 1951.
8. M. Karunanidhi, M. Paraprabhammam. Trichy: Dravidian Farm, 1953.
9. Kumaravelan, R. The Development of Tamil Drama: The Liberation Movement and the Dravidian Movement. Chennai: Tamilarasi Publishing House, 1991.
10. Shanmugasundaram, S. Kalaignar: Kalai Illikathadam. Bangalore: Kavya, 1999
11. Duraikannan, Narana. Drama in Tamil. Chennai: Vanathi Publishing House, 1976.
12. Parthasarathy, P.M. DMK. History. Chennai: Bharathi Publishing House, 1998.
13. Perumal, A.N. Origin and Development of Tamil Drama. Chennai: Aniyagam, 1983.
14. Murugesapandian.N. Kalaignar's plays in the development of the Dravidian movement. Chennai: Discovery Publishing House,2023.
15. Rajendran, P.L. Playwright Kalaignar. Chennai: Sangeetha Publishing House, 1999.

http://www.shanlaxjournals.com பக்கம் 1



சான்லாக்ஸ்
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

### கலைஞரின் நாடகங்கள் சித்திரிக்கும் திராவிடக் கருத்தியல்

[redacted]

***ஆய்வுச் சுருக்கம்***

*கலைஞரின் நாடகங்கள், பிரதி என்ற நிலையில் அவை வெளியான காலகட்டத்திலுக்கும் இன்றையச் சமூகச் சூழலுக்குமிடையில் முரண்களை எதிர்கொள்கின்றன. ஒரு குறிப்பிட்ட அரசியல் தேவை அல்லது சமூக நெருக்கடி காரணமாகக் கலைஞர் எழுதிய நாடகப் படைப்புகளின் சமகாலத் தன்மையை மதிப்பிட வேண்டியுள்ளது. கலைஞரின் நாடகங்கள், பிரதி என்ற நிலையில் நவீன வாசகரால் எவ்வாறு உள்வாங்கிக் கொள்ளப்படுகின்றன என்பது முக்கியமான கேள்வி. காலங்காலமாக அதிகாரம் செலுத்திய வைதிக சநாதனத்தையும் வருணாசிரமக் கோட்பாட்டையும் கேள்விக்குள்ளாக்கிய திராவிட இயக்கக் கருத்தியல் பின்புலத்தில் எழுதப்பட்ட கலைஞரின் நாடகங்கள் இன்றைக்கும் தேவைப்படுகின்றன.*

***முக்கியச் சொற்கள்:*** *திராவிட இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், கலைஞர், மு.கருணாநிதி, அரசியல், நாடகம், சமுதாயச் சீர்திருத்தம், சநாதன எதிர்ப்பு, தமிழ்நாடு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, தமிழ் அடையாளம், நிகழ்த்துக் கலை.*

தமிழிலக்கியத்திற்கு நாடகம், கவிதை, நாவல், சிறுகதை போன்ற இலக்கிய வடிவங்கள் மூலம் காத்திரமான பங்களிப்புச் செய்துள்ள மு.கருணாநிதி என்ற கலைஞரின் இலக்கிய ஆளுகை, பன்முகத்தன்மையுடையது. பல்லாண்டுகளாகத் தமிழ்நாட்டு அரசியலில் அழுத்தமான தடம் பதித்துள்ள கலைஞர், இலக்கிய ஆக்கத்திலும் தனித்தன்மையுடன் விளங்குகிறார். கலைஞரின் பதின்பருவ அரசியல் நுழைவும் நிகழ்த்துக்கலையான நாடகம் எழுதுதலும் பிரித்தறிய இயலாமல் ஒருங்கிணைந்துள்ளன. திராவிட இயக்கக் கருத்தியல் பிரச்சாரத்தின் பகுதியாக நாடகத்தைக் கருதிய கலைஞர் தன்னுடைய இளமைக்காலத்தில் அவர் எழுதிய நாடகங்களில் நடிக்கவும் செய்தார் என்பது முக்கியமான தகவல். கலைஞரின் படைப்பாக்கத் திறனில் நாடகமும் திரைப்படமும் ஒப்பீட்டளவில் சாதனைகள் படைத்துள்ளன. அவர், அரசியல் பரப்புரை காரணமாகத் தமிழ்நாடு முழுவதும் சுற்றியபோது நாடகங்கள் எழுதியும், நாடகங்களில் நடித்தும் தன்னுடைய கலை ஆர்வத்தை வெளிப்படுத்தினார். நாடகமாடுதல் என்பது இழிவாகக் கருதப்பட்ட கால கட்டத்தில், நாடகத்தில் நடிப்பதை விருப்பமாகக் கொண்ட கலைஞர் அடிப்படையில் கலை மனம் மிக்கவர். கலையின் வழியே வாழ்க்கையின் மேன்மைகளையும் இழிவுகளையும் விசாரித்திடும் கலைஞரின் கலை ஆளுமை, பன்முகத்தன்மையுடையது.

கலைஞரின் நாடகங்கள் யதார்த்தத்தை நகலெடுத்திடும் முறையில் துல்லியமான காட்சிகளைச் சித்திரிப்பவை அல்ல. வரலாற்று நாடகத்திலும்கூட சமகாலப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் தந்து எழுதப்பட்ட கலைஞரின் நாடகப் பிரதி, காட்சிப்படுத்தும்போது பார்வையாளர்களிடம் கேள்விகளை எழுப்புகின்றது. பொதுவாக நாடகம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்ற நம்பிக்கை நிலவுகிறது. அது ஏற்புடையது அல்ல. மாறாக நாடகம் வாழ்க்கையைச் செம்மையாக்கும் சுத்தியல் என்ற நாடகாசிரியர் ப்ரக்டின் கருத்து, கலைஞரின் நாடக ஆக்கங்களுக்குப் பொருந்துகிறது. வெறுமனே கேளிக்கை அல்லது பொழுது போக்கு என்று நிகழ்த்தப்படும் நாடகங்கள்

2 பக்கம் http://www.shanlaxjournals.com

**மேலே கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளில் எழுதி அனுப்பும் தகுதியான 50 ஆய்வுக் கட்டுரைகள் மட்டுமே ஆய்விதழில் அச்சிடப்படும்.**

**பதிவு செய்ய நிறைவு நாள் : 31.12.2025**

**இணைப்பு :-https://forms.gle/HjiPJQmCnzNpywV28**